**C.O.S.No. 2/2023** **தேதி – 01.07.2025**

**வா.சா.2.– அருண்குமார்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

வாதியின் தகப்பனாரை பற்றி எனக்கு தெரியாது. அவர் பிரதிவாதி நிறுவனத்தில் பணிபுரிந்த விபரம் பற்றி எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதியின் தகப்பனார் பிரதிவாதியின் நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவர் மீது பிரதிவாதி நிறுவனத்தார் கையாடல் குற்றச்சாட்டிற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் மீது கொடுத்த புகாரி இருந்து, அவரை தப்பிக்க வேண்டி வாதி கொடுத்த தவறான வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி நிறுவனத்தில் பணிபுரிய வில்லை. அவர்களது குழு நிறுவனமான இந்து மேச்சஸ் பிரைவேட் லிமிடேட் நிறுவனத்தில் பணிபுரிந்தேன். நான் தற்போது பிரதிவாதி நிறுவனத்தில் தணிக்கையாளராக இல்லை. பிரதிவாதி நிறுவனத்திற்கும், வாதி நிறுவனத்திற்கும் இடையே நடந்த பணப்பரிவர்த்தனை சம்பந்தமாக உள்விபரங்கள் தெரியாது என்றும், ஆகவே அது சம்பந்தமாக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. கணக்கு வழக்கு ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வதற்கும், அதனை பரிசீலனை செய்வதற்கும், பிரதிவாதி நிறுவனம் வாதி நிறுவனத்திற்கு தரவேண்டியதாக கூறப்படும் தொகையை கண்டறிந்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எழுத்து மூலமாக வாதி நிறுவனம் வேண்டுகோள் கொடுக்கவில்லை. நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.12 தொகுப்பில் இன்வாய்ஸ் எண்.54, 59 மற்றும் 65 ஆகியவற்றிற்கு வா.சா.ஆ.13 தொகுப்பில் E–waybill தாக்கல் செய்யப்பட வில்லை என்றால் இன்வாய்ஸ் தொகை ரூ.1 லட்சத்திற்கு குறைவாக இருந்ததால் அவ்வாறு தயார் செய்யப்படவில்லை. நான் சொல்வது விதிமுறைகளுக்கு புரம்பானது என்றும், அனைத்து இன்வாய்ஸ்களுக்கும் E–waybill உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்திருந்த பிராது நகலை நான் வாங்கி படித்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வாதி நிறுவனத்தில் ரொக்கம் பெற்றுக் கொண்ட வகைக்கு பராமரிக்கப்படும் ரொக்க ரசீது

அடிக்கட்டை தொகுப்புக்களை நான் பார்வையிடவில்லை. வாதி நிறுவனத்தில் பராமரிக்கப்பட்டு வரும் நாள்வழி பதிவேட்டை நான் பார்வையிடவில்லை. வாதி நிறுவனத்தின் லெட்சர் பதிவேட்டை நான் பார்வையிட்டேன். அது கணினி வழியாக பராமரிக்கப்ட்டு இருந்தது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அவ்வாறு நான் பார்வையிட்டதாக கூறப்படும் லெட்சர் பதிவேட்டின் நகல் தானா என்றால் இல்லை. வாதி நிறுவனத்தில் இருந்து அனுப்பப்பட்ட இன்வாய்ஸ்களுக்கு உரிய தொகை பிரதிவாதி நிறுவனத்தால் செலுத்தப்பட்டுவிட்டதா என்பதை வா.சா.ஆ.17 வங்கி கணக்கு தொகுப்பை பார்த்து நான் சாட்சியம் அளித்துள்ளேன். வா.சா.ஆ.12 க்கு முன்பாக வாதி நிறுவனத்தில் இருந்து அனுப்பபட்ட இன்வாய்ஸில் கூறப்பட்ட தொகை அப்படியே பிரதிவாதி நிறுவனத்தால் வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட விபரத்தை வா.சா.ஆ.17 ல் கூறப்பட்டுள்ளது. 11.08.2021 ம் தேதிக்கு பிறகு பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து வாதி நிறுவனத்திற்கு வங்கி மூலம் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. இன்வாய்ஸில் கூறப்பட்டுள்ள தொகை எவ்வளவு நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் என்று இன்வாய்ஸில் கூறப்படவில்லை. 05.04.2021 முதல் 18.10.2021 வரை பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து பல்வேறு தினங்களில் வாதி நிறுவனத்திற்கு வா.சா.ஆ.17 மூலம் ரூ.37,42,559/– வரவாகி உள்ளது என்றால் வங்கி கணக்கை சரிபார்த்துதான் சொல்லமுடியும். முதல்விசாரணையின் சாட்சியம் அளிக்கும் வரை, பிரதிவாதி நிறுவனத்தால் செலுத்தப்பட்ட தொகை மற்றும் வாதி நிறுவனத்தில் இருந்து பிரதிவாதி நிறுவனத்திற்கு மேற்படி காலங்களில் அனுப்பப்பட்ட இன்வாய்ஸில் கூறப்படும் தொகைகளும் ஒப்பிட்டு பார்த்து வியாபார பாக்கியை கண்டறிந்தீர்களா என்றால் கண்டறிந்தேன். வா.சா.ஆ.12 ன்படி பிரதிவாதி நிறுவனம் வாதி நிறுவனத்திற்கு ரூ.33,18,598/– செலுத்தப்பட வேண்டும் என்பது வாதியின் வழக்கு ஆகும். நான் வாதி நிறுவனத்தின் தணிக்கையாளர் என்பதால், வாதிக்கு மிகவும் நெருங்கிய நண்பர் என்பதாலும், பிரதிவாதி நிறுவனத்தின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக சரியான கணக்கியல் தத்துவத்தை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ல் ஆகஸ்ட் மாதத்திற்குரிய விற்பனை பட்டியலில் மொத்தம் 9 இன்வாய்ஸ்கள் மூலம்

சரக்கு மற்றும் சேவை வரி வசூல் செய்து கட்டப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அந்த விபரம் வா.சா.ஆ.16 ல் ஆகஸ்ட் மாதத்திற்கு சமர்ப்பிக்கபட்ட படிவம் GSTR –3B படிவத்தில் வரிசை எண்.3.1 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ன்படி சரக்கு மற்றும் சேவை வரியாக வாதி நிறுவனத்தால் வா.சா.ஆ.14 ல் கூறப்பட்டு 9 இன்வாய்ஸ்கள் மூலம் CGST ஆக ரூ.88,764/– மற்றும் SGST ஆக ரூ.88,764/– வசூல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ல் கூறப்பட்டுள்ள 9 இன்வாய்ஸ்களில் கூறப்பட்டுள்ள விபரங்களை கூட்டிப்பார்த்தால்தான் வா.சா.ஆ.16 வரிசை எண்.3.1 ல் கூறப்பட்டுள்ள தொகை குறித்து சரிபார்க்க முடியும் என்றால் சரிதான். அந்த நடவடிக்கைகளை நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ல் கூறப்பட்டுள்ள நிறுவனப் பட்டியலில் பிரதிவாதி நிறுவனத்தை தவிர இதர நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட இன்வாய்ஸ் தொகை மற்றும் வரித்தொகை ஆகியவற்றை குறிப்பு எடுத்து கொண்டேனா என்றால் குறிப்பு எடுத்து கொண்டேன். அவ்வாறு நான் எடுத்த குறிப்புகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.14 ல் டிசம்பர் மாதம் சமர்பித்த வாதி நிறுவனத்தின் அக்டோபர் மாத வியாபார வரவு செலவு பட்டியலில் வாதி நிறுவனம் உட்பட 4 நிறுவனங்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வகையில் மொத்தம் 9 இன்வாய்ஸ்கள் மூலம் வரி வசூலிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து CGST ஆக ரூ.73,823.40, ரூ.73,823.40 ரூ.3420.00, ரூ.5026.50 தொகை வசூல் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதேபோல் SGST ஆக ரூ.73,823.40, ரூ.73,823.40 ரூ.3420.00, ரூ.5026.50 தொகை வசூல் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மொத்தமாக ரூ.1,56,093.30 தொகை பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து வரி வகையில் வாதி நிறுவனத்திடமிருந்து வசூல் செய்யப்பட்டதாக மேற்படி ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.16 ன் படி வாதி நிறுவனம் 9 இன்வாய்ஸ்கள் மூலம் மொத்தம் CGST மூலம் ரூ.1,82,168.82 மற்றும் SGST மூலம் ரூ.1,82,168.82 வசூல் செய்யப்பட்டதாக தெரிய வருகிறது என்றால் சரிதான். மேற்படி தொகை விபரங்களை சரிபார்க்க இதர 5 இன்வாய்ஸ்கள் விபரங்களும் தேவை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் வருமான வரி படிவத்தில் வாதி

நிறுவனம் மேற்கொண்டுள்ள வியாபாரம் பற்றிய விபரங்களை தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால் பிரதான வியாபார நடவடிக்கைகளை தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். வாதிக்கு வா.சா.ஆ.12 தொகுப்பில் கூறப்பட்டுள்ள ரசாயனப் பொருட்களை வாங்கி விற்பனை செய்வது பிரதான தொழிலா என்றால் பிரதான தொழில் இல்லை. வருமான வரி படிவத்தில் 1க்கு மேற்பட்ட வியாபாரங்களை மேற்கொள்பவர்கள் குறைந்த பட்சம் 3 வியாபாரம் பற்றிய விபரங்களை தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18ல் தன்னுடைய வியாபாரத்தை பற்றி வாதியானவர் தெரிவித்துள்ள நிறுவனத்தின் பெயர் KG Marketting என்றும் மின்னணு சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் மொத்தம் மற்றும் சில்லரை வியாபாரங்கள் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். வாதி நிறுவனமான ஸ்ரீ மீனாட்சி டிரேடர்ஸ் என்ற பெயரையும், வா.சா.ஆ.12ல் கூறப்பட்டுள்ள வியாபார பொருட்களின் பெயரையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 வங்கி கணக்கில் மின்னணு உபகரணங்களை விற்ற வகைக்கு எந்த வரவு செலவு பதிவு செய்யப்படவில்லை என்றால் இந்த வங்கி கணக்கில் நடைபெறவில்லை. வேறு எந்த வங்கியில் மேற்படி வரவு செலவு நடந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வியாபாரம் குறித்து வேறு GST பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 வருமான வரிப்படிவம் ஸ்ரீ மீனாட்சி டிரேடர்ஸ்க்கான வரவு செலவு குறித்த படிவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.18ல் வாதியின் வழக்கு சம்பந்தப்பட்ட பிரதிவாதி வியாபார பாக்கி தொகை ரூ.33,18,598/-ஐ தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் தனியாக காட்டப்படவில்லை. மொத்த வியாபார கடன் பாக்கி தொகை ரூ.65,49,804/- இதில் உட்பட்டது ஆகும். மற்ற வியாபார நிறுவனங்களின் கடன் பாக்கி தொகையை என்னால் கூறமுடியும் என்றால் சரிதான். வாதி நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் Trial Balance மற்றும் லெட்சர் ஆகியவற்றை பார்த்தால்தான் மொத்த வியாபார கடன் பாக்கி தொகையில் பிரதிவாதியின் பாக்கி தொகையாக கூறப்படும் ரூ.33,18,598/- உள்ளடங்கும் என்பது சொல்லமுடியும் என்றால் சரிதான். வாதி நிறுவனத்தில் லெட்சர் நகலை நான் பெற்றுக் கொண்டேனா என்றால் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. வாதி நிறுவனத்தின்

பராமரிக்கப்பட்டு வரும் Trial Balance ஆவணத்தில் கடன்தாரர் பட்டியல் இனம் வாரியாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். அதனை சரிபார்த்தால் பிரதிவாதியின் கடன் பாக்கி விபரம் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.18 வரையுள்ள ஆவணங்கள் உண்மைநிலையை பிரதிபலிக்கவில்லை என்றும், வாதி தயார் செய்த ஆவணங்களை கேட்டுக் கொண்டதின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**